75. அரண்

741. *ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்*
போற்று பவர்க்கும் பொருள்
பகைவர் மீது போர்த்தொடுப்பதற்குப்
பலமிக்க கோட்டை பயன்படும் !
பகைவரிடமிருந்து அஞ்சித் தம்மைப்
பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வதற்கும்
பலமிக்க கோட்டை பயன்படும் !

742. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
காடும் உடைய தரண்
அகன்ற ஆழமான நீருள்ள அகழி
அகலப் பரந்த நிலம்
அருகே வானுயர்ந்த மலைத்தொடர்
அடர்ந்திருக்கும் காடு
அத்துணையும் சூழ்ந்து உள்ளதே
"அரண்" எனும் கோட்டை !

743. *உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்*
அமைவரண் என்றுரைக்கும் நூல்
எதிரிகள் எளிதில் ஏற முடியாத உயரம்
எழுச்சி பெற்ற வீரர்கள் புழங்கும் அகலம்
எறி குண்டுகள் துளைக்க முடியா திண்மை
எந்திர தந்திர இரகசியங்களின் அருமை
என நான்கும் அமைந்ததே அரண்
எனும் கோட்டை என நூல்கள் உரைக்கும் !

744. *சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை*
ஊக்கம் அழிப்ப தரண்
காவல் காக்க வேண்டிய நுழைவாயில் – எதிரிகள்
கால் படும் முதல் இடம் ஆகையால்
காவலுக்கு ஏற்றபடி மிகக் குறுகியதாய்
நுழைவாயிலுக்கு உள்ளே நுழைந்தவுடன் எதிரிகள்
நுணங்குதலுக்கு ஏற்றாற் போல் பகைவரை
நுறுங்குதலுக்காகப் பரந்த இடமாக அமைவதே கோட்டை !

745. *கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்*
நிலைக்கெளிதாம் நீர தரண்
பகைவரால் கைப்பற்ற முடியாததாக
பல விதமான உணவுப் பொருட்கள்
படையினருக்காகப் பதுங்கி வைப்பதாக
பல நாட்கள் தேவைப்படும் அளவு
பல விதமான வசதிகள் உள்ளதாகப்
பராமரிக்கப்படுவதே கோட்டை !

746. *எல்லாப் பொருளும் உடைத்தா யிடத்துதவும்*
நல்லா ளுடைய தரண்

போருக்குத் தேவையான எல்லாப் பொருளும்
போர்க்களத்தில் பகைவரை வெல்லும்
போர் வீரர்களைக் கொண்டதே கோட்டை !

747. *முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்*
பற்றற் கரிய தரண்

முற்றுகையிட்டுப் போர் செய்தோ – அல்லது
முற்றுகையிடாமல் போர் செய்தோ – அன்றியும்
நயவஞ்சகமாக சூழ்ச்சி செய்தோ – வெல்லலாம் என
நம்பி நெருங்கும் பகைவரால் கைப்பற்ற முடியாத
நல்ல தகுதியைக் கொண்டு விளங்குவதே கோட்டை

748. *முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்*
பற்றியார் வெல்வ தரண்

முற்றிலும் வலுவாகச் சூழ்ந்து வளைத்து
முற்றுகையிட்டவரைக் கோட்டைக்குள் உள்ளே நுழைந்து
முயன்றாலும் கண்டுபிடிக்க முடியாத அமைப்பினால்
“பற்றார்” எனப்படும் பகைவரை உள்ளேயே கைப் –
பற்றி வெல்வதற்கு ஏற்றதே அரண் !

749. *முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து*
வீறெய்தி மாண்ட தரண்

போர் முனையில் போர்த் தொடங்கியவுடன்
போர்க்கதவு கொண்ட கோட்டைக்குள்ளிருந்து
போராடித் கடும் தாக்குதல் நடத்தத் தன்னுடைய
போர் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதே அரண் !

750. *எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி*
இல்லார்கண் இல்ல தரண்

கோட்டைக்கு எவ்வளவு சிறப்பு இருந்தாலும்
கோட்டைக்குள் இருக்கும் வீரர்கள்
கோட்டை விடுபவர்களாக – செயலற்றவர்களாக இருந்தால்
கோட்டை இருந்தும் பயன் இல்லை !

78. படைச் செருக்கு

771. *என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை*
முன்னின்று கல்நின் றவர்

போர்க்களத்தில் போர் வீரனின் எச்சரிக்கை –
போரிடும் பகைவர்களே! என் அரசனைப்
போரில் எதிர்த்து நிற்காதீர்கள்!
போராடி மாண்டு நடு கல்லாய் – தெய்வமாய்ப்
போனவர்கள் பலப் பலர் !

772. *கான முயலெய்த அம்பினில் யானை*
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

கானகத்து முயல் மீது குறிதனைக்
காணும் போது சரியாக எய்த அம்பினை
வைத்திருப்பதை விட யானை மேல்
வைத்த குறி தவறிப் போன வேலினை
வைத்துக் கொண்டிருப்பதே இனிது !

773. *பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்*
ஊராண்மை மற்றதன் எஃகு

பேடியாய்ப் பகைவர்க்கு அஞ்சாத வீரத்தை
பேராண்மை எனப் பெருமை கொள்வார்கள் ! – உயிர்
ஊசலாடும் பகைவனுக்குக் கூட துன்பம் நேர்ந்தால்
ஊரை ஆளுந்தன்மையுடையவன் அவனுக்கு
ஊக்கத்தோடு உதவுவதே ஆண்மையின் கூர்மை !

774. *கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்*
மெய்வேல் பறியா நகும்

கையிலிருந்த வேலை – ஓர் யானையின் மேல்
கையெறிந்து வீசிக்கொன்றுவிட்டு
கைக்கெட்டும் தூரத்தில் ஓடி வருகிற யானையைத் தாக்க
கையெறி வேலைத் தேடித் தன் மார்பில் குத்திய எதிரியின் வேல்
கை கொடுக்கும் எனக் கண்டு மகிழ்பவன் வீரன் !

775. *விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்*
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு

போர்க்களத்தில் பகைவரைக் கோபங்கொண்டு
போதாமையுடன் பார்க்கும் விழிகள் – காற்று
போகும் வேகத்தில் வேல் வீசப்பட்டாலும்
போகிறப் போக்கில் விழிகள் இமைத்துவிட்டால்
போரில் புறமுதுகுக் காட்டி ஓடுவதற்க ஒப்பாகும் !

776. *விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்*
வைக்குந்தன் நாளை எடுத்து

வீரன், விழுப்புண் உடம்பினில் பட்டு
வீறு கொள்ளாத நாளெல்லாம் வாழ்வில்
வீணான நாட்கள் என வெறுப்பான் !

777. *சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்*
கழல்யாப்புக் காரிகை நீர்த்து

நிலைத்து வாழும் புகழை விரும்பி
நிலையில்லா உயிரை அதற்காக போரினில்
நித்தம் இழக்க விரும்பும் வீரனின்
நிற்கும் காலில் கட்டப்படும் கழல் அழகாகும் !

778. *உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்*
செறினுஞ்சீர் குன்றல் இலர்

அவசியமான நேரத்தில் உயிர் தரவும்
அஞ்சாத போர்க்களத்து வீர மறவர்கள்
அரசன் அடக்கினாலும் கோபப்பட்டாலும்
அப்படியே குன்றிப்போக மாட்டார்கள் !

779. *இழைத்த திகவாமைச் சாவாரை யாரே*
பிழைத்த தொறுக்கிற் பவர்

போர்க்களத்தில் சாவதற்குத் தயார் எனப்
போர்ப்படையில் சேரும்போது சபதம் எடுத்த
போர் வீரனை யாராவது தவறிப்
போய் கூட பிழைக்க வந்தவர் எனப் பிழையாகக் கூற மாட்டார் !

780. *புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா*
டிரந்துகோட் டக்க துடைத்து

தன்னை எப்போதும் காத்த
தலைவனுடைய கண்களிலிருந்து
தாரை தாரையாகக் கண்ணீர் வரும்படி
தான் சாக நேர்ந்தால் – அச்சாவினை
தான் யாசித்தாவது பெறுவது சிறப்பானது !